**செய்தி வெளியீடு எண்: 331** **நாள் : 09.07.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இன்று (09.07.2015) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக கடல் மீனவர்களின் நலனுக்கென செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்களான மீன்பிடி தடைகால நிவாரணம், மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் திட்டம், கடல் மீனவர்களுக்கான தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம் மற்றும் மீனவ மகளிருக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஆகிய மின்னணு பணபரிவர்த்தனை மூலம் உதவித்தொகை பட்டுவாடா செய்யப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

மீன்பிடி குறைவு காலத்திற்கான சிறப்பு நிவாரண திட்டத்தின் கீழ் 1.65 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ.66 கோடியும், தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1.94 இலட்சம் மீனவர்களுக்கு ரூ.52.38 கோடியும், தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1.77 இலட்சம் மீனவ மகளிருக்கு ரூ.47.79 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை இதுவரை 1.30 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ.26 கோடியும் ஆக மொத்தம் 6.66 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.192.17 கோடி நிவாரணத் தொகை உரிய காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியவாறு மேற்படி நிவாரணத் தொகையை மீனவ குடும்பங்களுக்கு உரிய காலத்தில் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதற்கு மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களை வெகுவாக

பாராட்டினார். மேற்கு கடற்கரை பகுதியில் தற்போது மீன்பிடி தடைகாலம் அமலில் உள்ள நிலையில், அப்பகுதி மீனவ குடும்பங்களுக்கு தடைகால நிவாரணத் தொகையை பயனாளிக்கு தடைகாலம் முடிவுறும் முன்னர் வழங்கிடுமாறு அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் மீனவர்களுக்கான இலவச வீட்டு வசதித்திட்டம் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தினை மேம்படுத்திடும் பொருட்டு மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய புரத மேலுணவு இயக்கக திட்டங்கள், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டங்கள், நீர்வள நிலவளத்திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டங்கள், வண்ண மீன்வளர்ப்புத் திட்டங்கள், நீர்த்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை மற்றும் மீன்குஞ்சு உற்பத்தி ஆகியவற்றின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்ததுடன் பணிகளை துரிதப்படுத்த அறிவுரை வழங்கினார்.

மீன்வளத்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இஆப., தலைமை அலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

மீன்துறை ஆணையருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**